வாசிக்க: ரோமர் 12:9-21

***"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் ...***
***உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" (மத் 5:44)***

கிறிஸ்தவனுக்கு விரோதிகளென்றால், பெரும்பாலும் சிலுவைக்கு விரோதிகளும், நற்செய்திப் பணியை எதிர்க்கிறவர்களுமே. ஆனால் சில வேளைகளில் தங்கள் விருப்பு, வெறுப்பு, சுபாவம் இவைகளையடுத்து பகைக்கிறவர்களும் இருக்கலாம். ஒருசில சமயங்களில் இவ்வித மக்களோடு சமாதானமாயிருப்பது இயலாமல் போகலாம். எனவேதான் "*கூடுமானால்* உங்களாலானமட்டும் எல்லா மனிதரோடும் சமாதானமாயிருங்கள்" என்கிறது திருமறை (ரோ 12:18). உங்களை எதிர்ப்போர் அல்லது விரோதிப்போருடன் உங்கள் உறவை மேம்படுத்த இதோ சில வழிமுறைகள்—

முதலாவது, அவர்கள்மீதும் உள்ள தேவ அன்பை எண்ணிப்பார்க்கவேண்டும். "கடவுள் தீயோர் மீதும் நல்லோர் மீதும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளோர் மீதும் அநீதியுள்ளோர் மீதும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத் 5:45). ஒவ்வொருவரும் இறைவனுக்கு அருமையானவர்கள். நல்லவன் அல்லது கெட்டவன் என்றழைக்கப்படும் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்தாரன்றோ ?

இரண்டாவது, நம்மீது கடவுள் எவ்வளவு பொறுமையாயிருக்கிறார் என்று சிந்தித்துப்பார்க்கவேண்டும்; எத்தனைமுறை நாம் அவரை ஏமாற்றியும் அவர் நம்மை விட்டுவிடவில்லையே. இரக்கத்தில் செல்வந்தராகிய அவர் நாமும் பிறரைக் குறைந்தது ஏழெழுபது தடவையாவது மன்னிக்க எதிர்பார்க்கிறார். இளைஞனாகிய யோசேப்பு தனக்குத் துரோகம்செய்து தன்னைக் குழியில் எறிந்துவிட்ட தனது சகோதரரைக்கூட மன்னித்தது அன்றோ இறைவன் விரும்பும் குணம் ? நன்மைக்குத் தீமை செய்வது சாத்தானின் பண்பு, தீமைக்குத் தீமை செய்வது மனிதனின் இயல்பு, தீமைக்கு நன்மை செய்வதோ இறைவனின் மாண்பு!

மூன்றாவது, நமது விரோதிகளுக்காக ஜெபிக்கவேண்டும் (மத் 5:44). ஜெப மண்ணில் அன்பு தழைத்தோங்கும். நம்மை வெறுக்கும் நபருக்காக ஜெபிக்கத் துவங்குகையில் அவரை நேசிப்பது எளிதாகிறது. "ஆண்டவரே, எனக்குத் தீங்கிழைத்த சிலரையெல்லாம் என்னால் மன்னிக்க முடியவில்லையே. உதவும், அப்பா" என்று ஆண்டவரிடம் வேண்டுவோம். சாதாரணமாக நம்மால் முடியாத நிலையிலும் எதிர்ப்போரை நேசிக்க அவர் தமது தூயாவியானவர் மூலம் தமது அன்பை நம்மில் ஊற்றுவார்.

பிசாசைக்கூட சபிக்கக் கடவுள் நம்மை அனுமதிக்கவில்லை (யூதா 9). எவரையும் சொல்லால் பழித்துவிடாதீர்கள். கசப்பான வேர் இதயத்தில் வேண்டாம் (எபி 12:14,15). பழிவாங்குதல் கடவுளுக்கே உரியது. அந்த ஆயுதத்தை உங்கள் கையில் எடுக்காதீர்கள். அதனாலேயே நீங்களும் மடிவீர்கள் (மத் 26:52). நம்மைத் துன்புறுத்துவோருக்கு நன்மையொன்று செய்யத் தருணம் நோக்கியிருப்போம். வெற்றி நமதே! (ரோ12:20,21). "ஒருவனது வழிகள் ஆண்டவருக்குப் பிரியமாயிருந்தால், அவனது எதிரிகளும் அவனுடன் சமாதானமாகும்படிச் செய்வார்" (நீதி 16:7).

*எப்பெயரில் எம்மனிதர் பிரிந்திடினும்*
*எல்லார்க்கும் இளையவனார் ஒரே ஒருவர்;*
*எப்போதும் திறந்த மனம் ஏற்பிருந்தால்*
*எதிர்பாரா புதுமைகள் தினம் நிகழும்!* *(கீர்த்தனை)*